# டிடீபி டிசைனர் கையேடு

கணினி வரைகலைப் பகுதியில் செயல்படும் புதியவர்கள், ஏற்கனவே வரைகலையில் உள்ளவர்கள் போன்றவர்களுக்கு அச்சுத்துறையின் சில அடிப்படை செய்திகளை அறிமுகம் செய்யும் விதத்தில், அடிப்படை தகவல்கள் பலவற்றைத் தொகுத்துக் கொடுப்பதாக உருவாக்கப்பட்டதே இந்தப் புத்தகம் ஆகும்.

முந்தைய அச்சுத்துறையில் புழக்கத்தில் இருந்த லெட்டர் பிரஸ், வேலையில் அச்சுக் கோர்ப்பாளர் என்பவர் அடிப்படை செய்திகளைப் பற்றிய பட்டறிவு மிக்கவராகத் திகழ்ந்தார் என்பது மறுக்க முடியாத உண்மையாகும்.

ஆனால் இன்று கணினிகளின் உதவியுடன் வடிவமைப்பு வேலைகள் செய்யப்படுகின்றன. இவற்றில் பணிபுரிவருபவர்கள் மட்டுமல்லாது டிடீபி மையங்களைத் துவக்குபவர்களும் பெரும்பாலும் அச்சுத்துறை பற்றிய அடிப்படைத்திறன் கிடைக்கப் பெறாதவர்களாவே உள்ளனர். இலட்சங்களை முதலீடு செய்து அதில் வேலைகளைப் பழகுகின்றனர். இதனால் வாடிக்கையாளர்களை மனநிறைவடையச் செய்வதில் தொல்லைகள் ஏற்படுகின்றன.

இதுபோன்ற நிலையில் உள்ளவர்களும் அறிந்த கொள்ளுவதற்காக உருவாக்கப்பட்டதே இந்தப் புத்தகம் ஆகும். காகிதம், பைண்டிங் வகைகள், எழுத்துருக்கள், ட்ராப்பிங், ப்ரூப் பார்ப்பது, இம்பொஸிஷன் - என்பன உள்ளிட்ட 29 தலைப்பகளில் தனித்தனி கட்டுரைகளாக ஏராளமான படங்களுடன் செய்திகள் கொடுக்கப்பட்டுள்ளன.

இந்த புத்தகத்தில் மொத்தம் 112 பக்கங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. புத்தகத்தின் அளவு டெமி 1/8 (உயரம் : 21.5 செமீ; அகலம் : 14 செமீ) ஆகும்.

ஐஎஸ்பிஎன் : 978-81-908318-4-0